[1972 மார்ச் 15

மேலும் இருப்பவர்களுக்கு அத்தகைய வசதிகளைச் செய்து தர தனிக் குழுவினர் முன்வருவார்களேயானால் அது வரவேற்கப்படும். ஆலயங்கள் அவற்றையெல்லாம் தாங்கிக் கொள்ளும் அளவுக்கு நிதிநிலை வசதிகளை பெற்றிருக்கின்றனவா என்பது ஆராயப்படவேண்டிய ஒன்று.

## அரசு வெளியிடும் பாடப்புத்தகங்கள்

*498 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு வெளியிடும் பாடப்புத்தகங்களை ஏஜெண்டுகள் மூலம் விற்பனை செய்வதற்குப் பதிலாக பள்ளிகளுக்கே நேரிடையாக விற்பனை செய்யும் செயற் குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** 1972-73-ம் ஆண்டில் தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் மேற் கொள்ளவிருக்கும் விற்பனை முறையின் கீழ் சென்னை, செங்கற்பட்டு மாவட்டங்களில் மட்டும் அரசுப்பாட நூல்களை நிறுவனமே சில்லறை விற்பனையாளர்களுக்கும் உயர்நிலைப்பள்ளிகளுக்கும் நேரடியாக விற்பனை செய்யும். அவர்களுக்கு நிறுவனம் 5 விழுக்காடு கழிவு தரும். பிற மாவட்டங்களில் ஒரு தாலுகாவுக்கு ஒரு மொத்த விற்பனையாளரையும், ஒவ்வொரு தாலுகாவுக்கும் சில சில்லறை விற்பனையாளர்களையும் நிறுவனமே நேரடியாக நியமிக்கும். தாலுகா விற்பனையாளர்களுக்கு நிறுவனம் 10 விழுக்காடு கழிவு தரவேண்டும். அன்னார் தங்களுக்குக் கீழுள்ள சில்லறை விற்பனையாளருக்கு 5 விழுக்காடு கழிவு தரவேண்டும். தங்கள் தாலுகாவிலுள்ள உயர்நிலைப்பள்ளிகளுக்கும் 5 விழுக்காடு கழிவுடன் விற்பனை செய்ய வேண்டும்.

**திரு. என். கிட்டப்பா:** தலைவர் அவர்களே, தனிப்பட்ட வியாபாரிகள் அரசாங்கத்திடமிருந்து வாங்கக்கூடிய புத்தகங்கள் எல்லாம் விற்பனையாகுமோ, ஆகாதோ என்ற ஐயப்பாட்டினால், ஒரு குறிப்பிட்ட அளவுக்குத்தான் புத்தகங்களை வாங்கி விற்பனை செய்கின்றார்கள். அதனால் முதலில் செல்லும் மாணவர்களுக்குத்தான் புத்தகம் கிடைக்கிறது. பின்னால் செல்லக்கூடியவர்களுக்குக் கிடைப்பதில்லை. ஆகவே, அந்தந்தப் பள்ளிகளுக்குத் தேவையான புத்தகங்களை அந்தந்தப் பள்ளிகளுக்கே நேரடியாக விற்பனை செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, ஏற்கெனவே எல்லா மாவட்டங்களிலும் ஒரு விற்பனையாளர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். சென்னை, செங்கற்பட்டை பொறுத்த வரையில் அரசு நிர்வாகமே நேரடியாக விநியோகம் செய்கிறது. அதை சில்லறை வியாபாரிகள் பெற்று, விற்பனை

செய்கிறார்கள். மற்ற மாவட்டங்களிலும் இப்போது தாலுகா அளவில் சில்லரை வியாபாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அரசாங்கம் மொத்த வியாபாரிகளைத்தான் நியமிக்கிறது. சில்லரை வியாபாரிகளை, மொத்த வியாபாரிகள் அமர்த்திக்கொள்கிறார்கள். மொத்த வியாபாரிகளுக்கு விற்பனை யில் 10 விழுக்காடு கொடுக்கப்படுகிறது. அவர்கள் சில்லரை வியாபாரிகளுக்கு 5 விழுக்காடு கொடுக்க வேண்டும்.

ஆனால், சில இடங்களில் அந்த 5 விழுக்காடு கொடுக்காமல், ஏமாற்றப்பட் டிருக்கிறார்கள். அதை அவர்கள் கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் புத்தகங்களை வெளியிடுவதில் சிறிது காலதாமதம் ஏற் பட்டிருந்ததால், புத்தகங்கள் கிடைப்பதில் கொஞ்சம் சிரமம் இருந்தது. ஆனால் இப்பொழுது மே மாதத்திற்குள் புத்தகங்கள் கிடைக்கக்கூடிய வகையில் அச்சிட்டு, தயாராக வைக்கப்பட்டுள்ளன. எனவே, புத்தக விநியோகத்தில் இந்த ஆண்டு முதல் சிறந்த பலன் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவரவர்களே, தமிழ்நாட்டு ஆசிரியர்கள் சங்கம் 6-3-72 அன்று ஒரு மனு அனுப்பி இருக்கிறார்கள். அதில் அவர்கள் குறிப்பிட்டிருப்பது, மதுரையில் ஒரே ஒரு புத்தக வியாபாரிக்குத்தான் விற்பனை உரிமைக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றும், மற்றவர்களுக்குக் கிடைக்கவில்லை என்றும் ஏற்கெனவே தமிழ்நாடு பூராவும் 600 வியாபாரிகள் இருக்கிறார்கள் என்றும், அவர்களுக்கும் விற்பனை உரிமை வேண்டுமென்றும் கேட்டிருக்கிறார்கள். ஆசிரியர்கள் சங்கம் வேண்டியுள்ள இந்த உதவியை செய்வதன் மூலம் எல்லாப் பள்ளிக்கூட மாணவர்களுக்கும் உரிய காலத்தில் புத்தகங்கள் கிடைக்க வகை ஏற்படும். ஆகவே, அரசாங்கம் அதற்கு ஏற்றபடி உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, ஒரு குறிப் பிட்ட வியாபாரியிடத்தில் பொறுப்பை ஒப்படைத்தால்தான் ஏதாவது தவறு கள் நடந்தாலும், அவரைக் கேட்பதற்கு வாய்ப்பு இருக்கும். மொத்த வியா பாரி சில்லரை வியாபாரிகளை வைத்து, புத்தகங்களை விநியோகம் செய்வதற்கு 5 விழுக்காடு கொடுக்க வேண்டுமென்று வகை செய்யப்பட்டிருக்கிறது.

அது மட்டுமல்லாமல், மொத்த வியாபாரிகள் வைப்புத் தொகை கட்டியிருக் கிறார்கள். அவர்கள் ஏதாவது தவறு செய்தால், வைப்புத் தொகையை நிறுத் திக்கொள்வதற்கு ஒப்பந்தத்தில் விதி இருக்கிறது. ஆகவே, இதில் எந்தவித தவறும் ஏற்பட வழி இல்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, இந்தப் புத்தக விற்பனையை மாணவர் கூட்டுறவு அங்காடிகள் மூலம் விற்பனை செய்தால், எல்லா மாணவர்களுக்கும் சிரமம் இல்லாமல் ஜூன் மாதத்திற்குள் புத்தகங்கள் கிடைத்துவிடும். தனிப்பட்ட வியாபாரிகள் மூலம் விற்பனை செய்வதால் அவர்கள் பல கஷ்டங்கள் கொடுக்கிறார்கள். எனவே, அரசாங்கம் இதற்கு தக்க நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இந்த விற்பனை உரிமையை கூட்டுறவு அங்காடிகள் கேட்பதாக இருந்தால், அவர்களுக்கு முதல் உரிமை கொடுக்கப்படும். பள்ளிக்கூட கூட்டுறவு அங்காடிகள் முன்வந்தாலும் அவர்களுக்கு முன் உரிமை அளிக்கப்படலாம். ஆனால் அந்த மாவட்டத்தில் கொண்டு சேர்க்கும் முழு பொறுப்பையும் அரசாங்கம் ஏற்றுக் கொள்ளும். இப்போதும் அப்படித்தான் செய்கிறது.

**திரு. கே. கந்தசாமி :** தலைவரவர்களே, தாலுகா அளவிலும், வட்ட அளவிலும், கூட்டுறவுச் சங்கங்கள் மூலமும் விற்பனைச் செய்வதற்கு அனுமதிக்கப்படும் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். பிர்க்கா அளவிலுள்ள சிறிய சிறிய வியாபாரிகள் முன்வந்தாலும், அவர்களுக்கும் விற்பனை உரிமை வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, பள்ளிக்கூட நூல்களை விற்பனை செய்வதற்கு என்று பதிவு செய்யப்பட்டவர்கள் மூலமாக புத்தகங்கள் விநியோகிக்கப்படும். மற்றவர்களுக்கு கொடுப்பதில்லை. கூட்டுறவுச் சங்கங்கள் விற்பனை உரிமை கோரினால், அவைகளுக்கு முன் உரிமை கொடுக்கப்படும். பதிவு செய்யப்பட்ட வியாபாரிகள் இடத்தில், சில்லரை வியாபாரிகள் உரிமை பெற்றுக்கொள்ளலாம்.

### ஆரம்பப் பள்ளிகள்

* 499. வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் ஆரம்பப் பாடசாலை இல்லாத கிராமங்களில் பாடசாலைகள் உடன் ஏற்படுத்த திட்டம் ஏதாவது அரசின் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?